Healthier SG

In partnership with

Health Promotion Board



# கருக்குழாய் வாய் புற்றுநோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.


**உங்கள் கருக்குழாய் வாய் புற்றுநோய்ப் பரிசோதனைக்கு இன்றே செல்லுங்கள். உங்கள் அன்புக்குரியவர்களுக்காக, உங்களுக்காக இன்றே பரிசோதனை செய்துகொள்ளுங்கள்.**

மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்தில் பதிவு செய்துள்ள தகுதிபெறும் சிங்கப்பூர்க் குடிமக்கள் கருக்குழாய் வாய் புற்றுநோய்க்கான பரிசோதனைக்குச் சிறப்புச் சலுகைகளைப் பெறுவார்கள். நீங்கள் பதிவு செய்துள்ள மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி மருந்தகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

healthiersg-screening.gov.sg
1800 223 1313
1800 சேவை இணைப்புகளுக்கான மொபைல் அழைப்புகளுக்கு நேரக் கட்டணங்கள் பொருந்தும் என்பதையும், வழக்கமான தரைவழி இணைப்புகளிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு மட்டுமே கட்டணம் இலவசம் என்பதையும் நினைவில் கொள்ளவும்.

## கருக்குழாய் வாய் புற்றுநோய் என்பது என்ன?

கருப்பையின் கழுத்துப் பகுதியில் உருவாகும் புற்றுநோயே கருக்குழாய் வாய் புற்றுநோய் என்று அழைக்கப்படுகிறது. நீண்ட காலமாக இருக்கும் மனித பாப்பிலோமா நோய்க்கிருமியின் (HPV) தொற்றால் இது ஏற்படுகிறது.




## மனித பாப்பிலோமா நோய்க்கிருமி (HPV) என்பது என்ன?

HPV என்பது ஒரு சாதாரணமான நோய்க்கிருமி. அது எல்லோரையும் ஏதாவதொரு காலகட்டத்தில் பாதிக்கும். அதில் 100க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. ஆனால் சுமார் 14 வகைக் கிருமிகள்தான் கருக்குழாய் வாய் புற்றுநோய்க்குக் காரணமாகும். அது உடலுறவின்போது, தோலோடு தோல் ஒட்டும்போது பரவக்கூடும்.

HPV ஒரு சாதாரண நோய்க்கிருமி என்பதால், நம்முடைய உடல் தானாகவே அந்தத் தொற்றை நீக்கிவிடும். ஆனால், அதிக ஆபத்துடைய HPV வகைகள் நீண்ட நாள் தொற்றை உருவாக்கி, அதன் மூலம் கருக்குழாய் வாய் புற்றுநோய் வரக்கூடும்.

## கருக்குழாய் வாய் புற்றுநோய் உருவாக எவ்வளவு காலம் ஆகும்?

கருக்குழாய் வாய் புற்றுநோய் மெதுவாக உருவாகும் ஒரு நோயாகும். பொதுவாக, கருக்குழாய் வாய் புற்றுநோய் உருவாக 15 ஆண்டுகள் வரை ஆகலாம். அதனால்தான், வழக்கமான கால இடைவெளியில் பரிசோதனை செய்வது மிகவும் முக்கியமாகிறது. ஏனெனில், ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் அதைக் குணமாக்க முடியும்.

## கருக்குழாய் வாய் புற்றுநோயின் ஆரம்பகால அறிகுறிகள் என்னென்ன?

வழக்கமாக, கருக்குழாய் வாய் புற்றுநோயின் ஆரம்ப காலத்தில் எந்த அறிகுறிகளும் தெரியாது.

## யாருக்கெல்லாம் கருக்குழாய் வாய் புற்றுநோயால் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது?

பாலியல் செயல்பாடுகளில் ஈடுபடும் எல்லாப் பெண்களுக்கும் இந்த ஆபத்து உள்ளது. கீழ்க்கண்டவர்களுக்கு ஆபத்து அதிகம்:

- மிகவும் பலவீனமான நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கும் நோய் கொண்டவர்கள் (எ.கா: லுபஸ் எனப்படும் தோல் அழிநோய்).
- மனித நோயெதிர்த்திறனழி நோய்க்கிருமி (HIV) உள்ளவர்கள்.

## நான் எப்போது தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் மற்றும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்?


நீங்கள் 9 முதல் 26 வயதுக்கு இடைப்பட்டவராக இருந்தால், HPV தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள்.

**HPV** தடுப்பூசி பற்றி மேலும் விவரங்கள் அறிய **https://go.gov.sg/hpv-immunisation** இணையத்தளத்திற்குச் செல்லவும்.

நீங்கள் 25 வயதுக்கு மேல் இருந்து, இதற்கு முன் பாலியல் செயல்பாட்டில் ஈடுபட்டிருந்தால், கருக்குழாய் வாய் புற்றுநோய்ப் பரிசோதனை செய்துகொள்ளவும்.

## கருக்குழாய் வாய் புற்றுநோய்ப் பரிசோதனை செய்யும்போது என்ன நடக்கும்?

- இது வேகமாகவும் எளிதாகவும் செய்யப்படும் ஒரு பரிசோதனை. பரிசோதனைக்காகப் பெண்ணுறுப்பில் ஒரு கருவி மெதுவாக உட்செலுத்தப்படும்.
- ஒரு மென்மையான தூரிகையைப் பயன்படுத்தி உங்கள் கருக்குழாயிலிருந்து சில உயிரணுக்கள் சேகரிக்கப்படும். பின்னர், இந்த உயிரணுக்கள் பரிசோதனைக்காகச் சோதனைக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.



நீங்கள் 25 முதல் 29 வயதுக்கு உட்பட்டவராயிருந்தால், பேப் (Pap) சோதனை மூலம் உங்கள் உயிரணுக்களில் வழக்கத்திற்கு மாறான மாற்றங்கள் இருக்கின்றனவா என்று சோதிக்கப்படும். இந்த வயதில் HPV தொற்றுகளை மிக விரைவாக நீக்கிவிட முடியும் என்பதால், உங்களுக்கு HPV சோதனை தேவையில்லை.

நீங்கள் 30 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராக இருந்தால், அதிக ஆபத்து விளைவிக்கும் கிருமி வகைகளைக் கண்டுபிடிக்க, உங்கள் உயிரணுக்கள் HPV சோதனைக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த வயதில், உங்களுக்குக் கருக்குழாய் வாய் புற்றுநோய் வரக்கூடிய ஆபத்தை HPV சோதனை மூலம் கண்டுபிடிக்கலாம்.

சோதனைக்குப் பின் நான்கு வாரங்களுக்குள் உங்கள் சோதனை முடிவுகள் தயாராகிவிடும். அதன்பின் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகள் தேவைப்பட்டால், உங்கள் மருத்துவர் ஆலோசனை அளிப்பார்.

## என்னுடைய சோதனை முடிவின் விளக்கம் என்ன?

### 25 முதல் 29 வயது வரை

**உங்களுக்கு:**

1) பேப் (Pap) சோதனையில் எந்தப் பிரச்சினையும் இல்லையென்றால், கருக்குழாய் வாய் உயிரணுக்கள் இயல்பாக உள்ளன. அடுத்த கருக்குழாய் வாய் புற்றுநோய்ப் பரிசோதனையை 3 ஆண்டுகளுக்கு பிறகு மேற்கொள்ளுங்கள்.
2) பேப் (Pap) சோதனை முடிவு வழக்கத்திற்கு மாறாக இருந்தால், தொற்று மற்றும்/அல்லது வழக்கத்திற்கு மாறான கருக்குழாய் வாய் உயிரணுக்கள் இருக்கலாம். இதனால் உங்களுக்குக் கருக்குழாய் வாய் புற்றுநோய் இருப்பதாகக் கருத வேண்டாம். உங்கள் மருத்துவர் சோதனை முடிவுகளை மறுஆய்வு செய்து, உங்களுக்குத் தேவையான சிகிச்சை பற்றி ஆலோசனை அளிப்பார்.

### 30 அல்லது அதற்கு மேற்பட்ட வயது

**உங்களுக்கு:**

1) உங்களுக்கு அதிக ஆபத்துள்ள HPV வகைக் கிருமிகள் இல்லையென்றால், கருக்குழாய் வாய் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து குறைவு. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கருக்குழாய் வாய் புற்றுநோய் பரிசோதனைக்குச் செல்லுங்கள்.
2) உங்களுக்கு மிகவும் ஆபத்தான HPV வகைக் கிருமி இருந்தால், கருக்குழாய் வாய் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து அதிகம். நீங்கள் ஒரு மகளிர் நோயியல் மருத்துவரைப் பார்க்கப் பரிந்துரைக்கப்படுவீர்கள். தேவைப்பட்டால் தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்.
3) உங்களுக்கு அதிக ஆபத்துள்ள மற்ற HPV வகை கிருமிகள் இருந்தால், ஒரு வருட காலத்திற்குப் பின் மற்றொரு HPV சோதனைக்குத் திரும்பும்படி உங்கள் மருத்துவர் உங்களுக்கு ஆலோசனை வழங்குவார்.

## நான் எனது கருக்குழாய் வாய் புற்றுநோய் பரிசோதனைக்கு எவ்வாறு தயாராவது?

- உங்கள் பரிசோதனைக்குக் குறைந்தது 48 மணி நேரத்திற்கு முன்பு பாலியல் செயல்பாட்டை தவிர்க்கவும்; மேலும் விந்தணுக் கொல்லிகள், பெண்ணுறுப்பு கிரீம்கள், உராய்வு மருந்துகள், யோனி மருந்துகள் அல்லது ‘டாம்பான்களைப்’ பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.




## கருக்குழாய் வாய் புற்றுநோய்ப் பரிசோதனைக் கட்டணம்

### பேப் (Pap) பரிசோதனைக் கட்டணம்

**25 முதல் 29 வயது வரை**

$15 பலதுறை மருந்தகங்களில் சிங்கப்பூரர்களுக்கு
$22.50 பலதுறை மருந்தகங்களில் நிரந்தரவாசிகளுக்கு
$2 அல்லது $5 - CHAS தனியார் மருந்தகங்களில் சிங்கப்பூரர்களுக்கு

### HPV சோதனைக் கட்டணம்

**30 அல்லது அதற்கு மேற்பட்ட வயது**

$22.50 பலதுறை மருந்தகங்களில் சிங்கப்பூரர்களுக்கு
$33.75 பலதுறை மருந்தகங்களில் நிரந்தரவாசிகளுக்கு
$2 அல்லது $5 - CHAS தனியார் மருந்தகங்களில் சிங்கப்பூரர்களுக்கு

**மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்தில் பதிவு செய்துள்ள தகுதிபெறும் சிங்கப்பூர்க் குடிமக்கள் கருக்குழாய் வாய் புற்றுநோய்க்கான பரிசோதனைக்குச் சிறப்புச் சலுகைகளைப் பெறுவார்கள். நீங்கள் பதிவு செய்துள்ள மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி மருந்தகத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

**மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி சுகாதாரப் பரிசோதனை மானியம் பற்றிய மேல்விவரங்களுக்கு, healthiersg-screening.gov.sg இணையத்தளத்தில் சென்று உங்கள் தகுதிநிலையைச் சரிபார்க்கவும்.**

HPB PA 679-23 V1 (May 2025)

The information is correct at the time of printing.
அச்சிட்ட நேரத்தில் தகவல் சரியாக இருந்தது.